செ.வெ.எண். 57 பத்திரிகை செய்தி நாள். 22.09.2017

**தமிழ்நாடு அரசு**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

**அகில இந்தி தொழிற் பழகுநர் தேர்வு (தனிநபர் தேர்வு) அறிவிப்பு**

மத்திய அரசு வழங்கும் தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (NAC) பெறும் பொருட்டு, அரசு / தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் குறிப்பிட்ட தொழிற் பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் ((NTC) பெற்றவர்கள் இதே தொழிற் பிரிவில் தனி நபராக அகில இந்திய தொழிற் பழகுநர் தொழிற் தேர்வில் கலந்து கொள்ள விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்று (ITI) தேர்ச்சி பெற்று தேசிய தொழிற் சான்றிதழ் பெற்றவர்கள, தொழிற் பழகுநர் சட்டம் 1961 கீழ் தொழிற் பழகுநர் பயிற்சியினை தொழிற் சாலைகளில் முடிக்காதவர்கள், தொழிற் பழகுநர் சட்டம் 1961-ன்படி தொழிற் பழகுநர் பயிற்சி வழங்கும் பட்டியலில் இடம் பெற்ற தொழில் நிறுவனங்களில் நேரடி பணியாளர்களாக குறைந்தபட்ச அனுபவம் பெற்றவர்கள், மத்திய அரசு வழங்கும் தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பெற விரும்பினால் தனி விண்ணப்பதாரராக (Private Candidate) கீழ்கண்ட அட்டவணைப்படி மத்திய அரசால் நடத்தப்படும் அகில இந்திய தொழிற் பழகுநர் தொழிற் தேர்வில் கலந்து கொள்ளலாம்.

| தேர்வு கால அட்டவணை | | |
|---|---|---|
| நாள் | பாடப்பிரிவு | நேரம் |
| 07.11.2017 | Theory | 9.30 A.M |
| 07.11.2017 | Employability Skills | 2.30 P.M |
| 08.11.2017 | Workshop Calculation & Science | 9.30 A.M |
| 08.11.2017 | Engineering Drawing | 1.30 P.M |
| 09.11.2017<br>10.11.2017<br>11.11.2017 | Practical | 9.30 A.M |

கீழ்கண்ட இடங்களில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் / அரசு தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் அமைந்துள்ள தொடர் அறிவுரை மைய உதவி இயக்குநர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு பிற விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

<u>அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் / தொடர் அறிவுரை மையங்கள் விவரம்:</u>

அம்பத்தூர், கிண்டி, வடசென்னை, வேலூர், திருச்சி, கடலூர், தஞ்சாவூர், கோயம்பத்தூர், சேலம், ஓசூர், தாராபுரம், மேட்டூர் அணை, மதுரை மற்றும் திருநெல்வேலி.

தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு மத்திய அரசு வழங்கும் தேசிய தொழிற் பழகுநர் (National Apprenticeship Certificate - NAC) வழங்கப்படும்.

தேர்வுக்கான விண்ணப்பம், அந்தந்த அரசு தொடர் அறிவுரை மையங்களில் உள்ள உதவி இயக்குநர்களை அணுகி பெற்று இதனை தட்டச்சு செய்து விவரங்களை பூர்த்தி செய்து மேற்கூறப்பட்ட அரசு தொழிற் பயிற்சி நிலைய தொடர் அறிவுரை மையங்களில் தாங்கள் பணிபுரியும் நிறுவனம் வழியாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்வுக்கட்டணம் ரூ.200/-ஐ கீழ்கண்ட அரசு கணக்குத் தலைப்பில் சார்பு கருவூலம் / மாவட்ட கருவூலங்களில் செலுத்து சீட்டு மூலம் செலுத்தலாம்.

0230 Labour and Employment – 800 – other receipts –
Ac – craftsmen Training Scheme 05 – Apprentices Act
DPC No. 0230 – 00 800 – AC – 0508

மண்டல பயிற்சி இணை இயக்குநருக்காக மாவட்ட ஆட்சித்தலைவர்